# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-2** **தேதி:-03.06.2017**

**ஊதிய மாற்றம் காண களம் அமைப்போம்**
**அனைத்து சங்கங்களின் முதல் கட்ட போராட்ட அறைகூவல்**
**27.07.2017 ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்**

அன்பார்ந்த தோழர்களே,

01.01.2017 முதல் நடைபெற உள்ள ஊதிய மாற்றம் எவ்வளவு முக்கியமானது என்பது நம் அனைவரும் அறிந்ததே. உழைப்பாளிகளின் நியாயமான கோரிக்கைகள் எதுவும் போராடாமல் அடைந்ததில்லை. இன்று நாம் நமது நியாயமான உரிமையான ஊதிய மாற்றத்திற்காக போராட தயாராவோம்.

அதிகாரிகளுக்காக அமைக்கப்பட்ட 3வது ஊதிய மாற்றக் குழு தனது பரிந்துரைகளை அறிவித்துள்ளது. அதில் உள்ள "நிறுவனத்தின் வழங்க இயலக்கூடிய அளவு(AFFORDABILITY)" பிரிவின் படி, BSNL ஊழியர்கள் ஊதிய மாற்றத்திற்கு தகுதி இல்லாதவர்களாக உள்ளனர். அந்த பிரிவு தெரிவிப்பதாவது:-

**"ஊதிய மாற்றத்தால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினம், அந்த நிறுவனத்தின், கடந்த மூன்று நிதியாண்டுகளின் வரிக்கு முந்தைய சராசரி லாபத்தின் 20 சதவிகிதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்."**

2009-10ஆம் ஆண்டு முதல் BSNL நிறுவனம் லாபமீட்டாத காரணத்தால், இயற்கையாகவே அதன் ஊழியர்கள் ஊதிய மாற்றத்திற்கு தகுதி இல்லாதவர்களாக மாறி விடுகின்றனர். BSNL ஊழியர்கள் ஊதிய மாற்ற பயனை அடையும் வண்ணம், 3வது ஊதிய மாற்றக் குழுவின் இந்த பிரிவிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என BSNLல் உள்ள சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தன. நமது இந்த கோரிக்கைக்கு BSNL நிர்வாகம் ஆதரவு தெரிவித்திருந்தது. DOT செயலாளராக திரு J.S.தீபக் இருக்கும் வரை நமது கோரிக்கைக்கு DOTயும் தனது ஆதரவை வழங்கியிருந்தது. ஆனால் தற்போது DOT தனது நிலையினை மாற்றிக் கொண்டு விட்டது. அமைச்சரவை செயலாளர் தலைமையில் நடைபெற்ற கடந்த ஊதிய மாற்றக் குழு மீதான கூட்டத்தில், 3வது ஊதிய மாற்ற குழுவின் பரிந்துரையில் உள்ள AFFORDABILITY பிரிவிலிருந்து BSNL ஊழியர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கவில்லை. BSNLல் பணியாற்றும் ஊழியர்களையும் அதிகாரிகளையும் DOT ஒட்டுமொத்தமாக கைகழுவி விட்டது. தற்போது 3வது ஊதிய மாற்றக் குழுவின் மீதான அரசாங்கத்தின் முடிவுகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன. குறைந்த பட்சம் இந்த சூழ்நிலையிலாவது BSNL ஊழியர்கள் ஒட்டு மொத்தமாக ஒரே குரலில் பொருத்தமான இயக்கங்கள் மூலமாக தங்களின் உணர்வுகளை தெரிவிக்க வேண்டியது மிக மிக அவசியம். இது ஒரு வாழ்வா? சாவா? எனும் சூழ்நிலை.

இது தொடர்பாக 02.06.2017 அன்று கூடிய அனைத்து சங்கங்களின் கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கம் சார்பாக தோழர் P.அபிமன்யு, தோழர் சுவபன் சக்கரவர்த்தி, தோழர் கோகுல் வோரா ஆகியோரும், NFTE சார்பாக அதன் பொருளாளர் தோழர் A.ராஜ மௌலி அவர்களும், SNEA சார்பாக தோழர் G.L.ஜோகி, தோழர் K.செபாஸ்டியன், தோழர் M.S.அடசுல் ஆகியோரும், AIBSNLEA சார்பாக அதன் பொது செயலாளர் தோழர் பிரகலாத் ராய் அவர்களும், FNTO சார்பாக தோழர் மொஹிந்தர் சிங், AIGETOA சார்பாக தோழர் ரவி ஷில் வர்மா மற்றும் தோழர் B.லக்ஷ்மண் ஆகியோரும், BSNLMS சார்பாக தோழர் சர்னாம் சிங் மற்றும் தோழர் தோமர் ஆகியோரும், ATM சார்பாக தோழர் ரேவதி பிரசாத், BTU சார்பாக தோழர் ஹரி சிங் மற்றும் BSNLOA சார்பாக தோழர் H.P.சிங் ஆகியோர் பங்கேற்றனர். தோழர் பிரகலாத்ராய் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் 27.07.2017 அன்று

வேலை நிறுத்தம் நடத்துவது உள்ளிட்ட போராட்ட இயக்கங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. வேலை நிறுத்த அறிவிப்பில் அனைத்து சங்கங்களின் பொது செயலாளர்களும் கையெழுத்திடுவதென்றும் அரசாங்கம் மற்றும் நிர்வாகத்துடனான இதர தொடர்புகளில் அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு கையெழுத்திடுவார் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் முடிந்தவுடன் தோழர் P.அபிமன்யு, தோழர் சுவபன் சக்கரவர்த்தி, தோழர் கோகுல் வோரா (BSNLEU), தோழர் G.L.ஜோகி, தோழர் K.செபாஸ்டியன், தோழர் M.S.அடசுல் (SNEA), தோழர் மொஹிந்தர் சிங் (FNTO), தோழர் ரவி ஷில் வர்மா (AIGETOA), தோழர் சர்னாம் சிங் மற்றும் தோழர் தோமர்(BSNLMS), ஆகியோரும், தோழர் ரேவதி ரசாத்(ATM) மற்றும் தோழர் ஹரி சிங்(BTU) ஆகியோர் நேரடியாக NFTE அலுவலகத்திற்கு சென்று அதன் பொது செயலாளர் தோழர் சந்தேஸ்வர் சிங் அவர்களை சந்தித்து விவாதித்தனர். ஊதிய மாற்றத்தை வெற்றிகரமாக்கிட ஒன்று பட்ட இயக்கங்களின் அவசியம் தொடர்பாக அவரிடம் தெரிவித்து ஒன்று பட்ட இயக்கத்திற்கு வரவேண்டும் என கேட்டுக் கொண்டனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை எடுத்துக் கூறிய தலைவர்கள் தேவைப்பட்டால் தேதிகளை மாற்றுவதற்கு கூட தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். மற்ற தோழர்களுடன் கலந்தாலோசித்து சாதகமான முடிவுகளை எடுப்பதாக NFTE பொது செயலாளர் தோழர் சந்தேஸ்வர் சிங் உறுதி அளித்துள்ளார்.

அலுவலக வளாகத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை நடத்திடுவதற்கான தடையினை BSNL நிர்வாகம் 06.05.2017 அன்று பாடியாலா மாவட்ட நீதிமன்றத்தில் பெற்றுள்ளது. இந்த தடையினை 08.05.2017 தேதியிட்ட கடிதத்தின் மூலமாக அனைத்து தலைமை பொது மேலாளர்களுக்கும் கார்ப்பரேட் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் அலுவலக வளாகத்திற்குள் தொழிற்சங்க நடவடிக்கைகளை நிர்வாகம் தடை செய்துள்ளது. கார்ப்பரேட் அலுவலகத்தின் கடிதத்தை சுட்டிக் காட்டி பல தலைமை பொது மேலாளர்கள், ஆர்ப்பாட்டம், தர்ணா, உண்ணாவிரதம் போன்ற நடவடிக்கைகளுக்கு தடை விதித்து சங்கங்களுக்கு கடிதம் கொடுத்துள்ளனர். 02.06.2017 அன்று நடைபெற்ற அனைத்து சங்க கூட்டத்தில் இந்த உத்தரவிற்கு கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளதோடு எந்த வித நிபந்தனையும் இன்றி உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும் என நிர்வாகத்தையும் கேட்டுக் கொண்டுள்ளது.

**<u>போராட்டங்களும் கோரிக்கைகளும்…</u>**

**கோரிக்கைகள்:-**

- **01.01.2017 முதல் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றம் மற்றும் ஓய்வூதிய மாற்றத்தை முடிவு செய்க!**
- **நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வூதிய பலன்களை உடனடியாக முடிவு செய்க!**
- **BSNLல் தொழிற்சங்க நடவடிக்கைகளை தடைசெய்யும் கார்ப்பரேட் அலுவலகம், 08.05.2017 அன்று வெளியிட்ட கடிதத்தை நிபந்தனையில்லாமல் திரும்ப பெறுக!**

**இயக்கங்கள்:-**

- **20.06.2017 அன்று நாடு தழுவிய தர்ணா.**
- **13.07.2017 ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம்**
- **27.07.2017 ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்**

இயக்கங்களை வெற்றிகரமாக்கிடுவோம்!! ஊதிய மாற்றத்தை பெற்றிடுவோம்!!!

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**

**மாநில செயலாளர்**